# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

**முதலாம் தவணை மதிப்பீட்டுப் பரீட்சை - 2022**

| தரம் - 10 | தமிழ் மொழியும் இலக்கியமும் | நேரம் :- 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................

## பகுதி I

**பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. "அணிதேர் புரவி ஆட்பெரும்படை" இங்கே புரவி என்பதன் பொருள்
    1. சிங்கம் 2. குதிரை 3. மலை 4. யானை
02. "நாயனையார் கேண்மை கெழீஇக் கொளல் வேண்டும்" இங்கே கேண்மை என்பதன் பொருள்
    1. பகைமை 2. சிறுமை 3. நட்பு 4. பெருமை
03. "மிக்காரைச் சேர்தல் மிகமாண முன் இனிதே" மிக்கார் என்பதன் எதிர்ப்பதம்
    1. அறிவுடையார் 2. அறிவிலார் 3. ஏதிலார் 4. கணவன்
04. "நாவலர் அவர்களின் காசம் அவர்களுக்கு அனுகூலமாக அமைந்தது" இங்கே அனுகூலம் என்பதன் எதிர்ப்பதம்
    1. வியாகூலம் 2. திரிகூடம் 3. பிரதிகூலம் 4. சிறுமாடம்
05. வாலிபன் என்பதன் பெண்பாலாக அமைவது
    1. வாலியை 2. வாலை 3. வாலினி 4. வாலுவிச்சி
06. "பாணன் பண் இசைத்தான்" பாணன் என்பதன் எதிர்ப்பாற் சொல்லாக அமைவது
    1. பாணி 2. பாணள் 3. பாவை 4. பாடினி
07. கரும்பின் இலை மரபுப் பெயராக அமைவது
    1. தாள் 2. ஓலை 3. கூந்தல் 4. தோகை
08. வண்டி செலுத்துபவன் சாரதி என்பது போல யானை, தேர் செலுத்துபவன்
    1. பாகன் 2. ஓட்டி 3. மீகாமன் 4. வலவன்
09. 'உற்சாகமூட்டுதல்' என்ற மரபுத்தொடர் குறிப்பது
    1. தட்டிப்பார்த்தல் 2. தடைதாண்டுதல்
    3. தட்டிக்கொடுத்தல் 4. தட்டிக்கழித்தல்
10. 'எய்தவன் இருக்க அம்பை நோவானேன்' என்ற பழமொழியின் கருத்து
    1. தப்பபிப்பிராயம் 2. வீண்வாதம்
    3. முன்வினைப்பயன் 4. மதிப்பின்மை
11. சமநிலைத் தொடர்களால் அமைந்த வாக்கியம்
    1. கூற்று வாக்கியம் 2. தனிவாக்கியம் 3. கலப்புவாக்கியம் 4. கூட்டுவாக்கியம்
12. ககரம் h என்னும் ஆங்கில எழுத்துக்கு நிகராக ஒலிக்கும் சொல்
    1. சிங்கம் 2. கடல் 3. தேகம் 4. கருணை



kalvi.lk

13. 'சுதந்திர நற்பயிர்' இதில் இடம்பெற்றுள்ள அணி

1. உருவக அணி  2. சிலேடை  3. உவமையணி  4. மடக்கு

14. ஒத்த பொருள் தரும் சொற்களாலான இணைமொழி

1. அமளிதுமளி  2. சீருஞ்சிறப்பும்  3. ஆதியந்தம்  4. மேடுபள்ளம்

15. பகுபதமாக அமையும் சொல்

1. அழகு  2. அறிஞன்  3. மரம்  4. வாரணம்

16. சித்திரித்தான் என்பதன் பகுதி

1. சித்திரி  2. சித்தம்  3. சித்திரம்  4. சித்திப்பு

17. 'நோயால் மெலிந்தான்' அதில் "ஆல்" உருபு எப்பொருளில் வந்துள்ளது.

1. கலப்புறுபொருள்  2. அடைமொழிப்பொருள்
3. மூலப்பொருள்  4. காரணப்பொருள்

18. "ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்" இங்கே உரிச்சொற்றொடராக அமைவது

1. ஓடு  2. உறுமீன்  3. உறு  4. ஓடுமீன்

19. பண்புத்தொகையாக அமைவது

1. தண்டாமரை  2.கமலமது  3. உறவாடி  4. கானத்திடை

20. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றினை ஒழுங்கு பெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும் அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு மிகப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

அ) பக்தி இலக்கியத்தின் வெற்றிக்குரிய காரணங்கள் பலவாகும்.

ஆ) அன்புக்குரிய ஆணாக கடவுளும் அவனை அடைய நினைக்கும் பெண்ணாக மனிதனும் பக்தி இலக்கியத்தில் சித்திரிக்கப்படுகின்றனர்.

இ) பக்தி இயக்கத்தின் ஆற்றல் வாய்ந்த கருவியாக பக்தி இலக்கியங்கள் திகழ்கின்றன.

ஈ) அவற்றில் முதன்மையானது பக்தி இலக்கியத்தை பாடிய மானிட அனுபவங்களை இறை அனுபவமாக மாற்றியமை.

உ) ஆணும் பெண்ணும் சேரும் குடும்ப உருவாக்கத்தின் அமைப்பை பக்தியில் காணலாம்.

1. இ, அ, ஆ, ஈ, உ  2. ஆ, இ, அ, ஈ, உ
3. இ, உ, ஈ, ஆ. அ  4. இ, அ, ஈ, ஆ. உ

($^1/_2$ x 20 = 10 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி II

***(01)* சுருக்கமான விடை தருக.**

1. "அனைவரும் ஒற்றுமையாக வாழ்ந்திட வேண்டும்." இவ்வாக்கியத்தின் எழுவாயை எழுதுக.
2. கரை என்பது பெயராகவும், வினையாகவும் அமையுமாறு வாக்கியங்கள் எழுதுக.
3. சந்திரமதி காட்டுக்குச் சென்றாள்
   சந்திரமதி தன் மகனைத் தேடினாள்.
   இவ்விரு வாக்கியங்களையும் கூட்டு வாக்கியமாக எழுதுக.
4. எரி என்பது செயப்படுபொருள் குன்றிய வினையாகவும், குன்றாத வினையாகவும் அமையுமாறு வாக்கியம் அமைக்குக.
5. அவ் வீட்டிலுள்ள மனிதர்கள் அறத்தோடு வாழ்ந்தனர். இவ்வாக்கியத்திலுள்ள புறச்சுட்டினை எழுதுக.

(1x 5 = 5 புள்ளிகள்)

***(02)*** **பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து 200 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.**

01. நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பின்னடைவானது விவசாயத்துறையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. நாளுக்குநாள் பொருட்களின் விலை அதிகரித்தவண்ணம் இருக்கின்றது. குறிப்பாக மரக்கறிகளின் விலை அதிகரித்தவண்ணமுள்ளது. இதனைச் சமாளிப்பதற்கு வீட்டுத்தோட்டம் செய்வது அவசியமானமாகும். இது தொடர்பான ஒரு **விளக்கக் கட்டுரை.**

02. இன்று சமூகத்தில் பல்வேறு விதமான குற்றச்செயல்கள் நாளுக்கு நாள் பெருகிவருகின்றன. குற்றச் செயல்கள் மேலோங்கிவருவதற்கு தொடர்புசாதனங்களின் பயன்பாடும் காரணமாக அமைகின்றது என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டு வருகின்றது. இதனை வலியுறுத்தும் ஒருவருக்கும் மறுத்துரைக்கும் இன்னொருவருக்குமான **உரையாடல்**.

03. ஒரு சமூகத்தின் உள ஆரோக்கியத்தைப் பேணுவதில் இலக்கியங்கள் பெரிதும் துணையாக இருக்கின்றன. தமிழில் எழுந்துள்ள நீதிநூல்கள் சமூகத்தை மேம்படுத்தும் உயர்ந்த நோக்கத்தைக் கொண்டவையாகவே உள்ளன. அத்தோடு எமது இலக்கியங்களும் மனிதவாழ்வுக்கான செம்மையான வழிகளைக் காட்டி நிற்கின்றன. எனவே இலக்கியக் கல்வி என்பது அவசியமானதாகும் என்பதை வலியுறுத்தி ஒரு **மேடைப்பேச்சு**



kalvi.lk

04. தன் தவறுகளை உணர்ந்து சமூகத்தில் நல்ல மனிதனாக வாழவேண்டும் என வைராக்கியம் கொண்டு தானே முயன்று தனக்கான ஒரு தொழிலை உருவாக்கிக் கடினமாக உழைக்கின்ற போதும் சித்திரனால் சந்தோசத்தை உணரமுடியவில்லை. வாழுங்காலத்தில் தாய் தந்தையரை மதிக்காது விட்டதும் அவர்கள் நோய்வாய்ப்பட்டு இறந்ததும் அவனது வாழ்க்கையை வெறுமையாக்கிவிட்டது. பெற்றோரை அவர்கள் வாழுங்காலத்தில் பேணவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி **சிறுகதை**

(20 புள்ளிகள்)

**(03) பின்வரும் உரைப்பகுதியின் சுருக்கத்தை 20 - 25 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக.**
**(சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக)**

மொழி கற்கும் பணியில் மாணவர்களுக்கு கல்வி புகட்டும் கருவியாக உடனுழைக்கும் நண்பனாக உறுதுணை புரியும் ஒரு வசதிப் பொருளாகக் கணினி இருக்கின்றது. ‘‘சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம் வைத்தொரு கல்வி மனப்பழக்கம்’’ என்று பாடினார் ஔவையார். மொழி அமைப்பின் கூறு ஒன்றினை மாணவனுக்கு அறிமுகப்படுத்திப் பின்னர் அக்கூறு பற்றி அவன் நன்கு விளங்கிக் கொள்ளவும் அதனைப் பயன்படுத்திக் கையாளும் ஆற்றலைப் பெறவும்மொழிப்பயிற்சி என்பது தேவைப்படுகின்றது. இந்நோக்கங்களை நிறைவேற்றும் குறிக்கோளுடன் பயிற்சி வினாக்கள் அமைக்கப்படுகின்றன. இவ்வினாக்களுக்கு விடையளிக்க தயாரித்துக் கணினி வழிக்கல்வியை கொடுக்கலாம் இவற்றை நோக்கிய மாணவன் இவற்றிற்கேற்ப விடையளிக்கிறான். உடனே மாணவன் தன் விடைகள் சரியா? தவறா? எனக் கணினி வழி அறிகிறான். சரி என்றால் பாராட்டையும் தவறு செய்வதால் திரும்பச் செய்வதற்குரிய தூண்டுதலையும் அவன் கணணி வழிபெறுகிறான். திரும்பத் திரும்பத் தவறு செய்வதால் சரியான விடையையும் அவன் விரும்பினால் கணினியில் பெறமுடியும், இவ்வாறு மொழிகற்கும் மாணவனுக்கு மொழிப் பயிற்சி நல்கும் ஒருதனிப்பட்ட ஆசிரியனாக அதாவது கல்வி புகட்டும் கருவியாகக் கணினி திகழ்கின்றது

(8 புள்ளிகள்)

**(04) பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன்கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

சி.வை.தாமோதரம்பிள்ளை பல பாட்டுக்களையும் உரைநடை நூல்களையும் இயற்றியுள்ளார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் முதன்முதலில் பி.ஏ.பட்டம் பெற்றுச் சிறப்பாகத்தேறிய அவர், ஆங்கிலத்தில் பெற்றிருந்த புலமையும் ஆராய்ச்சி அறிவையும் தமிழிலக்கியவளர்ச்சிக்கு நல்ல முறையில் பயன்படுத்தினார். அவருடைய பாடல்களும் உரைநடையும் பழையமுறையில் சொற்செறிவும்



kalvi.lk

பொருட்செறிவும் உடையன. இன்று அவர் இயற்றிய நூல்கள் மறக்கப்பட்டபோதிலும் பனையோலையில் இருந்த பழைய தமிழ் ஏடுகள் சிலவற்றைப் பெரு முயற்சியுடன் படித்து முதன்முதலாக அச்சிட்டு வெளியிட்ட அவருடைய அரிய தொண்டு மறுக்கப்படவில்லை. நீதிபதி அளவிற்கு உயர்பதவி பெற்று விளங்கிய அவர், அக்காலத்தில் தமிழ்த் தொண்டைப் பெருமையாகக் கருதினார். உதயதாரகை என்ற பத்திரிகைக்கும் ஆசிரியராக இருந்து தொண்டு புரிந்தார். பனையோலை ஏடுகளைப் புறக்கணித்தால் பழைய நூல்கள் அழிந்து விடுமே என்று பெருங்கவலை கொண்டு முதல் குரல் எழுப்பிப் பல தமிழ் நூல்களைக் காப்பாற்றியவர் அவர்.

01. சி.வை தாமோதரம்பிள்ளை சென்னைப் பல்கலைக் கழகத்தில் பெற்ற பட்டம் எது?
02. அவர் எத்தகைய நூல்களை இயற்றியுள்ளார்?
03. அவருடைய எத்தொண்டு மறுக்கப்படவில்லை?
04. சி.வை தாமோதரம்பிள்ளை ஆசிரியராக பதவி வகித்த பத்திரிகை எது?
05. அவருக்கு ஏற்பட்ட பெருங்கவலை என்ன?

(5 புள்ளிகள்)

(05) கோவர்தனபுரம் பிரதேசசபைக்குட்பட்ட பொதிகைக்குளம் கிராமத்திலுள்ள ஆதித்தசோழன் விளையாட்டு மைதானம் நீண்ட காலம் புனரமைக்கப்படாதிருக்கின்றது. இதனால் இப் பிரதேசத்திலுள்ள இளைஞர்கள் உரிய பொழுதுபோக்கு வசதியின்றிக் காணப்படுகின்றார்கள். இக்கிராமத்தில் உள்ள திருந்செந்தாழை இளைஞர் பேரவையின் செயலாளர் திரு.ஆ.அரங்கராஜனாக உம்மைக் கருதி பிரதேசசபைத் தவிசாளர் திரு. பா. உத்தமகரிகாலனுக்கு மைதானத்தைப் புனரமைத்துத்தருமாறு கோரி பின்வரும் விடயங்களை உள்ளடக்கியதாக 100 சொற்களில் கடிதம் எழுதுக.

1. மைதானத்தின் தற்போதய நிலை
2. புனரமைக்கப்படுவதன் அவசியம்
3. பிரதேசத்தவர்கள் அடையும் நன்மைகள்

**அல்லது**

வீதிகளில் கொட்டப்படுகின்ற குப்பைகளால் சுற்றாடல் பலவழிகளிலும் மாசடைந்து வருகின்றது. இத்தகைய பொறுப்பற்ற செயல்களால் மக்களிடையே தொற்றுநோய்கள் பரவுவதற்கான அபாயமும் ஏற்பட்டுள்ளது. இதனை வெளிப்படுத்தும் விதமாக இந்திரபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் சார்பாக 100 சொற்களில் ஒரு விழிப்புணர்வுத் துண்டுப்பிரசுரம் எழுதுக.

(10 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி III

(01) **சுருக்கமான விடை தருக.**

*01.* "கணக்காய ரில்லாத வூரும் பிணக்கறுக்கு
மூத்தோரை யில்லா வவைக்களனும்
அ) இதனைச் சந்திபிரித்து எழுதுக?
ஆ) பிணக்கு என்பதன் கருத்து யாது?

*02.* "எட்டுணை யானும் இரவாது தான் ஈதல்
எத்துணையும் ஆற்றல் இனிது
அ) எட்டுணை என்பதைப் பிரித்து எழுதுக?
ஆ) ஈதல் என்பதன் எதிர்க்கருத்துச் சொல் யாது?

*03.* "தமது வலியை அங்கவஸ்திரத்தில் ஆவாகனம் பண்ணிப் பக்கத்தில் வைத்து விட்டு பாடஞ்சொல்லுவது வழக்கம்"
அ) இங்கு குறிப்பிடப்படுபவர் யார்?
ஆ) அங்கவஸ்திரம், ஆவாகனம் என்பவற்றின் கருத்து யாது?

*04.* "சீரெ டுத்த புலையியற் சாரர் கள்
தேச பக்தர் வரவினைக் காத்தர் போல்"
அ) இதில் இடம்பெற்றுள்ள அணி யாது?
ஆ) புலையியற் சாரர்கள் எனப்படுவோர்?

*05.* "யாத்த தேருரு ளைப்படு மேழைதான்
யாண்டு தேர் செலு மாங்கிழுப் புற்றென"
அ) யாண்டு என்பதன் கருத்து யாது?
ஆ) மேழை எனப்படுவது யாது? (2 x 5 =10 புள்ளிகள்)

***(02)* பின்வரும் செய்யுட் பகுதிகளையும், உரைநடைப் பகுதியை வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

*01.* அடக்கம் உடையார் அறிவிலர் என்று எண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா - மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு
அ) அடக்கமுடையாரின் இயல்பு யாது?
ஆ) உவமை அணியை விளக்குக?



kalvi.lk

02. தாழும் உள்ளத்தர் சோர்வினர் ஆடுபோல்
தாவி தாவி பலபொருள் நாடுவோர்
வீழும் ஓர் இடையூற்றினுக்கு அஞ்சுவோர்
விரும்பும் யாவும் பெறார் இவர்தாமன்றே

அ) விரும்பியதை அடைய முடியாதவர்களின் இயல்புகள் எவை?
ஆ) இப்பாடலில் கையாளப்பட்டுள்ள அணி யாது?

03. 'விலகு பிள்ளை' என்று வழக்கமாகச் சொல்லுவதைச் சொல்லுமுன்னமே விசுவநாதபிள்ளை விலகி இடங்கொடுத்தார். நாவலர் அவர்களின் நிலை – கம்பீரமான தோற்றம் - வீறு கொண்ட பார்வை- எண்ணங்களின் வேகம் - இவற்றை வருணிக்க அந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு கம்பர் இல்லை. "அதுகிடக்க எடுத்துக்கொண்டு வா, தந்தி தபாற்கட்டுக்களை" என்றார் நாவலர் அவர்கள். எல்லோரும் பிரமித்துப் போனார்கள்.

அ) நாவலரின் நிலை எவ்வாறு சித்திரிக்கப்பட்டுள்ளது?
ஆ) எல்லோரும் பிரமிக்கும்படி நாவலர் கூறியது என்ன?

(4 x 3 = 12 புள்ளிகள்)

**(03) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.**

01. நீதிப்பாடல்களில்
அ) அறிவுடையோர், அறிவிலார் இயல்பு
ஆ) நல்ல நட்பு, கூடா நட்பின் இயல்பு
என்பன வெளிப்படுமாற்றைத் தெளிவுபடுத்துக. (10 புள்ளிகள்)

02. நாவலர் எழுந்தார் கட்டுரையில்
அ) நாவலரின் தோற்றப் பொலிவு
ஆ) நாவலர் எழுதவற்கு முன்னரும் எழுந்த பின்னருமான கூட்டத்தின் நிலை
என்பன வெளிப்படுமாற்றை விளக்குக. (10 புள்ளிகள்)

03. பாரதியாரின் சுயசரிதையில்
அ) பாரதியார் காதலிக்காகக் காத்திருக்கும் விதம்
ஆ) பாடல்களில் இடம்பெற்றுள்ள உவமையணி
என்பனவற்றை விளக்குக. (10 புள்ளிகள்)



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

*இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.*

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...


Education கல்வி அධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457